# மிருகங்களும் பறவைகளும்



ஆடு

ஆடு கத்தும்.
அது குழை தின்னும்.



மாடு

மாடு கதறும்.
அது புல் மேயும்.



நாய்

நாய் குரைக்கும்.
அது வீட்டைக் காக்கும்.



பூனை

பூனை சீறும்.
அது எலி பிடிக்கும்.



காகம்

காகம் கரையும்.
அது கூடு கட்டும்.



கோழி

கோழி கொக்கரிக்கும்.
அது முட்டை இடும்.



கிளி

கிளி பேசும்.
அது பழம் தின்னும்.



மயில்

மயில் அகவும்.
அது அழகாக ஆடும்.

குறிப்பு: * இவை போன்று மாணவர்கள் புதிதாக ஆக்குவதற்கு வழிவகுக்கவும்.
* இவை தொடர்பான சிறுவினாக்களுக்கு விடை கூற வழிநடாத்துக.